# செவிச்செல்வம்

## *"Diploma in Community Radio & Mass Communication"*

## *Radio Enabled Learning*

*August -2019*

*STUDY MATERIAL*

## *CHAPTER 1 - HISTORY OF AIRWAVES AND EVOLUTION OF RADIO*

*SRUTHI CRS 90.8 MHz*

*Sri Sankara Arts & Science College Campus, Enathur, Kanchipuram – 631 561*

# HISTORY OF AIRWAVES (ஒலி அலைகளின் வரலாறு)

CHAPTER-1

EPISODE-2

SRUTHI CRS 90.8 MHz

Sri Sankara Arts & Science College Campus, Enathur, Kanchipuram – 631 561

# வானொலி வரலாறு

- வானொலி என்னும் யோசனை பிரிட்டனை சேர்ந்த ஜேம்ஸ் மேக்ஸ்வெல் என்பவருக்கு 1865 இல்  தோன்றியது.
- மேக்ஸ்வெல்லின் கணித தேற்றம்  மின்காந்த அலைகள் பற்றிய கொள்கை பரவ  காரணமாயிற்று.
- மேக்ஸ்வெல் மற்றும் அவர் சக விஞ்ஞானிகளால்  நிரூபிக்க முடியாத மின் காந்த அலைகளை 1887இல் ஜெர்மன் விஞ்ஞானி ஹென்ரிச் ஹெர்ட்ஸ் நிரூபித்தார்.
- மின்காந்த அலைகள் காற்றின் மூலம் ஒரு உபகரணத்தில் இருந்து மற்றொரு உபகரணத்திற்கு  வானொலி அலைகளாக பரவியது. இவை ஹெர்ட்ஸின் அலைகள் என்று மாறின.

# வானொலி வரலாறு

- *மார்கோனி என்னும் இத்தாலி நாட்டு அறிஞர் ஹெர்ட்ஸின் அலைகள்செல்லும் பாதையை கண்டு பிடிக்க ஒரு சாதனை புரிந்தார்.*

- *இவர் ஒலியை விரைவில் பல கிலோமீட்டர் தூரம் செல்லும் முறையை கண்டார்.*

- *1897இல் கம்பி இல்லா தந்தி முறையை கண்டுபிடித்தார்.*

- *உலகின் முதல் வானொலி தொழிற்சாலையை நிறுவினார். வியாபார ரீதியான இவ்வகை வர்த்தக ஒலிபரப்பு பென்சில்வேனியாவில் 1920ஆம் ஆண்டு நவம்பர் 2 ஆம் நாள் தொடங்கியது.*

# வானொலி வரலாறு

- *KDKA என்னும் ஒலிபரப்பின் மூலம் மக்கள் ஜனாதிபதி தேர்தல் முடிவுகளை பகிர்ந்து கொண்டார்கள்.*
- ஊடகத்தில் வானொலி என்னும் கருவி கேட்போர் சிந்தனைகளில் பலவகையான மாற்றங்களை கொண்டு வந்தது.
- லட்சக்கணக்கான மக்கள் நாட்டில் நடக்கும் முக்கிய நிகழ்வுகள் பற்றியும், அரசியல் தலைவர்கள் பற்றியும் அறிந்து கொண்டதுடன் இசையையும் கேட்டு மகிழ்ந்தனர்.
- நம் நாட்டில் பம்பாய் பிரசிடென்சி வானொலி குழு மற்ற குழுக்களுடன் சேர்ந்து *1923*ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஒலிபரப்பை தொடங்கியது.

# வானொலி வரலாறு

- முதன்முதலில் இந்திய தனியார் ஒலிபரப்பு நிறுவனம் இரண்டு நிலையங்கள் தொடங்க ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.
- அவற்றில் ஒன்று பம்பாயில்1927ஆம் ஆண்டு ஜூலை23ஆம் தேதி, மற்றொன்று கொல்கத்தாவில்1927ஆம் ஆண்டு ஆகஸ்ட்26 ஆம் நாள் தொடங்கியது.
- இடையில் ஒரு திடீர் மாற்றம் ஏற்பட்டது. என்னவென்றால் 1930ஆம் ஆண்டு தனியார் நிறுவனம் மூடும் நிலைக்கு வந்துவிட்டது.
- பின்னர் அரசாங்கமே ஒலிபரப்பு சேவையை மேற்கொண்டு, ISBS(Indian State Broadcasting Service) என்னும் இந்திய மாநில ஒலிபரப்பு சேவை ஏப்ரல் மாதம் 1930இல் தொடங்கியது.

# வானொலி வரலாறு

- பின்னர் மே *1932*இல் எடுக்க பட்ட முடிவின் படி அத்திட்டம் நிரந்தரமாக நடத்தப்படும் என்பதாகும்.

- இந்த *ISBS* தான் ஜூன் *1936* அன்றே *All India Radio(AIR)* என மாறிவிட்டது, அதுமட்டும் இல்லாமல் *1927*இல் மெட்ராஸ் ரேடியோ கிளப் சென்னை எழும்பூரில் தொடங்கப்பட்டது.

- *AIR 1946* இல் தகவல் மற்றும் ஒலிபரப்பு துறைக்கு மாற்றப்பட்டது.

- இந்திய சுதந்திரம் அடைந்த போது *1947* இல் மொத்தம் *6* நிலையங்கள் இருந்தன.

# வானொலி வரலாறு

- *அந்த நாளில் மொத்தம் 275000 வானொலி பெட்டிகள் இருந்தன.*

- *1957ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஆரம்பிக்க பட்ட* **விவித்த பாரதி** *என்னும் ஒலிபரப்பு, இத்துடன் ப்ரெச்சார் பாரதி தன்னாட்சி பெற்ற இந்திய ஒலிபரப்பு. ப்ரெச்சார் பாரதி விதி 1990இன் அடிப்படையில் 1998ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.*

- *1977இல் FM ஒலிபரப்பு சென்னையில் தொடங்கியது. பின்னர் 80களில் விரிவுபடுத்தப்பட்டு, 90களில் தனியார் FM வசதிகளை பெற்றனர்.*

# வானொலி வரலாறு

- அரசாங்கம் ஒரு சுதந்திரமான கொள்கையை *FM* வானொலி ஒலிபரப்பு விரிவாக்கத்திற்கென அறிவித்தது.
- தனியார் நிறுவன உரிமத்திற்கு உண்டான கட்டணத்தின் அடிப்படையில் *FM* வானொலி நிலையங்கள் ஆரம்பித்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.
- இக்கொள்கை தனியார் துறை ஒலிபரப்பை விரிவுபடுத்தியது.
- ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் அரசாங்கத்திற்கு தனியாரிடம் இருந்து கிடைத்தது.

# வானொலி வரலாறு

- *FM வானொலி நிலையங்கள் தங்கள் ஒலிபரப்பை விரிவாக்கிக்கொள்ள அதிகமாக செலவழிக்க தயாராக இருந்தன.*

- *ஒரு சமுதாயத்தால் பயன்படுத்தப்படும் எந்த ஒரு ஊடகத்தின் சேவையின் பயன்பாடும் சமுதாய ஊடகம் ஆகும்.*

- *"பங்கு கொள்ளுதல் மற்றும் அணுகுதல்" இவை இரண்டும் சமுதாய ஊடகத்தின் மிக பெரிய அம்சமாகும்.*

# வானொலி வரலாறு

- சமுதாய ஊடகம் என்பது வானொலி, தொலைக்காட்சி, வலையமைப்பு அல்லது கலவை ஊடகமாக இருக்கலாம்.
- *1968இல் முதல் பொது அணுகு முறை தொலைக்காட்சி நிலையம் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் சமுதாய ஊடகம் என அழைக்கப்பட்டது.*
- வெர்ஜினியாவில் வேல்ஸ் என்னும் நகரத்தில் தொடங்கப்பட்டது.